Registered as a NewsPaper பக்கங்கள் 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 05 ( 18 - 03 - 1992 ) புதன்கிழமை ஓசை: 29

## அடையாள அட்டைகளுக்கு விரைவில் விண்ணப்பிக்குக

(கொழும்பு)

க. பொ. த. (உயர்தரம்) பரீட்சார்த்திகள் தேசிய அடையாள அட்டைகளுக்கு இந்த வருடம் நேர காலத்துடன் விண்ணப்பிக்க வேண்டும் என ஆள் பதிவுத் திணைக்கள ஆணையாளர் பண்டுலா குலத்துங்கா தெரிவித்தார். க. பொ. த. (உயர்தரப்) பரீட்சார்த்திகள் தத்தம் பாடசாலை அதிபர்களூடாக விண்ணப்பித்தால் முன்னுரிமை வழங்கப்படும் என்று ஆள் பதிவுத் திணைக்களம் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளது. தனிப்பட்ட பரீட்சார்த்திகள் கிராம சேவையாளரிடமிருந்து படிவங்களைப் பெற்று அவர்கள் ஊடாக அனுப்ப வேண்டும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## மணலாற்றில் பயங்கர சண்டை

# இராணுவ அணிமீது புலிகள் பாய்ச்சல்

# 26 படை பலி: மூன்று கவச வண்டி அழிப்பு

[மணலாறு]

மணலாறு - கொக்குத்தொடுவாய் இராணுவ முகாமிலிருந்து நேற்றுக்காலை வாகனங்கள் சகிதம வெளியேறிய இராணுவத்தினரை விடுதலைப்புலிகள் வழி மடக்கி அதிரடித்தாக்குதல் ஒன்றைத் தொடுத்தனர். இதைத் தொடர்ந்து இப் பகுதியில் உக்கிரமோதல் மூண்டது.

பல மணிநேரம் நீடித்த இவ் உக்கிரமோதலில் 26 க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். கனரக ஆயுதங்கள் பொருத்தப்பட்ட மூன்று வாகனங்கள் அழிக்கப்பட்டன. பெருமளவு கனரக ஆயுதங்களும் புலிகளால் பறிக்கப்பட்டன. பதினொரு புலிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் நடந்த இம்மோதலை ஊர்ஜிதப்படுத்திய சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் 26 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகத் தெரிவித்தது. அதேவேளை, சுயாதீனமான செய்திகள் இறந்த இராணுவத்தினர் தொகை இதைவிட அதிகமெனவும், பல இராணுவத்தினர் படுகாயமடைந்ததாகவும் தெரிவித்தன.

## இரத்ததானம் செய்க

இரத்தவங்கியில் சகல பிரிவு இரத்தங்களும் முடிவுற்றுள்ளதால் பொது மக்களை உடனடியாக விரைந்து இரத்ததானம் வழங்குமாறு யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியினர் அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர்.

### உள்ளே:...

**அன்னை பூபதியின் உருவப் படம்**

இன்றைய ஈழநாதத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தவறாது கேட்டுப் பெற்றுக் கொள்ளவும்.

## எறிகணை வீச்சு

வவுனியா பேயாடிக்கூளாம்குளம் பகுதியில் அமைந்துள்ள சிறிலங்கா இராணுவ காவலரண்களிலிருந்து கடந்த சனிக்கிழமை முதல் துப்பாக்கி பிரயோகமும், எறிகணைத் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனால் அப்பகுதிகளில்

## ஆர்.சி.எல்; 50 கலிபர் உட்பட கனரக ஆயுதங்கள் பறிப்பு


[மணலாறு]

மணலாறு மாவட்டம் கொக்குத்தொடுவாய் இராணுவ முகாமிலிருந்து கனரக ஆயுதங்கள் பொருத்திய வாகனங்கள் சகிதம் முன்னேறிய இராணு

| | |
|---|---|
| ★ 106 எம். எம். ஆர். சி. எல். [பின் உதைப்பற்ற பீரங்கி] | 01 |
| ★ இதன் ஷெல்கள் | 05 |
| ★ 50 கலிபர் துப்பாக்கி | -01 |
| ★ இதன் முக்காலி | -01 |
| ★ இதன் மகசீன் | -10 |
| ★ ரி-56-1 ரகத்துப்பாக்கி | -02 |
| ★ ரி-56-2 ரகத் துப்பாக்கி | -04 |
| ★ ரி-56 பழையமொடல் துப்பாக்கி | -01 |

## 106மிமீ.எம்.40 பின்னுதைப்பற்றபீரங்கி

**(106 mm M40 Recoilless Gun)**



106 மி.மீ எம். 40 பின்னுதைப்பற்ற பீரங்கிகள் 32 இற்கு மேற்பட்ட நாடுகளில் பிரதான தாங்கி எதிர்ப்பு ஆயுதமாக உபயோகிக்கப்படுகிறது. அமெரிக்க தயாரிப்பான இந்த ஆயுதம் இந்தியா, இஸ்ரேல், பாகிஸ்தான், ஜப்பான், பிரேசில், ஸ்பெயின் முதலிய நாடுகளில் உபயோகத்தில் உள்ளன.

இந்த பீரங்கியால் ஒரு கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள டாங்கிகளைக்கூட தகர்க்கமுடியும்.

இந்தப் பீரங்கியின் நீளம் 3,4 மீற்றர். இதனுடைய நிறை 209.5 கிலோ. இதன் மூலம் நிமிடத்திற்கு ஒரு குண்டைச் சுடலாம். மோட்டார் எறிகணை போல் பயன்படுத்தும்போது ஏழு கிலோமீற்றருக்கும் கூடுதலான தூரத்திற்கு இதன் குண்டுகள் பாயக்கூடியவை.

இவற்றில் மூன்று வகையான வெடிகுண்டுகளை உபயோகிக்கலாம்.

★ டாங்கி எதிர்ப்பு உயர்சக்தி வெடிமருந்தைக் கொண்ட வெடிகுண்டு (HEAT)

★ பிளாஸ்ரிக் உயர்சக்தி வெடிமருந்தையும் பாதைச்சுட்டியையும் (Tracer) கொண்ட

பட்டுள்ளது. தவறாது கேட்டுப் பெற்றுக் கொள்ளவும்.

## எறிகணை வீச்சு

வவுனியா பேயாடிக்கூளாம்குளம் பகுதியில் அமைந்துள்ள சிறிலங்கா இராணுவ காவலரண்களிலிருந்து கடந்த சனிக்கிழமை முதல் துப்பாக்கி பிரயோகமும், எறிகணைத் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனால் அப்பகுதிகளில் மீளக்குடியமர்த்த மக்கள் இடம் பெயர்ந்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## பலத்த எறிகணை வீச்சு

(நமது நிருபர்)

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் இரவு ஏழு மணி தொடக்கம் நள்ளிரவு பன்னிரண்டு மணி வரை கடும் எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இவ் எறிகணைகளில் அநேகமானவை வடமராட்சிப் பகுதிகளில் விழுந்து வெடித்தன அத்துடன் ஏழாலை, அச்சுவேலி, குப்பிளான், புன்னாலைக்கட்டுவன் பகுதியிலும் இவ் எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததாக தெரியவருகிறது.

## பகிஷ்கரிப்பு

தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படாமையைக் கண்டித்து நேற்று யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர்கள் பாடசாலைகளைப் பகிஷ்கரித்தனர் இப்பகிஷ்கரிப்புப் போராட்டத்தை தொண்டர் ஆசிரியர் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது. (க)

# ஆர்.சி.எல்; 50 கலிபர் உட்பட கனரக ஆயுதங்கள் பறிப்பு

[மணலாறு]

மணலாறு மாவட்டம் கொக்குத்தொடுவாய் இராணுவ முகாமிலிருந்து கனரக ஆயுதங்கள் பொருத்திய வாகனங்கள் சகிதம் முன்னேறிய இராணுவத்தினரை வழி மறித்து விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் போது ஆர். சி. எல். 50 கலிபர் உட்பட பெருந் தொகையான நவீன கனரக ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இத்தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு.

★ 106 எம். எம். ஆர். சி. எல். 01 [பின் உதைப்பற்ற பீரங்கி]
★ இதன் ஷெல்கள் 05
★ 50 கலிபர் துப்பாக்கி -01
★ இதன் முக்காலி -01
★ மேலதிக சுடுகுழல் -01
★ 50 கலிபர் ரவைகள் - 1974
★ ஏ. கே. எல். எம். ஜி. -02
★ இதன் ரம் மகசீன் -02
★ லிங் -88
★ ஆர். பி. ஜி -01
★ இதன் ஷெல்கள் -03
★ 203 பிஸ்ரல் -01
★ இதன் ஷெல் -01
★ ரி-81-1 ரகத்துப்பாக்கி -02
★ இதன் மகசீன் -10
★ ரி-56 -1 ரகத்துப்பாக்கி -02
★ ரி-56-2 ரகத் துப்பாக்கி -04
★ ரி-56 பழையமொடல் துப்பாக்கி -01
★ ஏ. கே. மகசீன் -28
★ ஏ கே. கோல்சர் -04
★ ஜக்கட் -08
★ ஜே. ஆர். ரக கைக் குண்டுகள் -07
★ கிற்பாக் -05
★ தண்ணீர் கான் -03
★ கெல் மற் -01
★ காதமுக்கி -01

# 11 வேங்கைகள் களப்பலி

மணலாறு கொக்குத்தொடுவாய் முகாமிலிருந்து நேற்றுக் காலை வெளியேறிய இராணுவத்தினர்மீது நடாத்தப்பட்ட உக்கிரத் தாக்குதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் பதினொரு வீரவேங்கைகள் களப் பலியாகினர்.

★ லெப்டினன்ட் ஈழவன் (அரியரத்தினம் பிரதீப்குமார், குரும்பசிட்டி)
★ 2ஆம் லெப்டினன்ட் செம்மனச்செல்வன் (குரு) [வீரசிங்கம்ஜெயராசா, நாவிதன் வெளி, கல்முனை)
★ 2ஆம் லெப்டினன்ட் தகையான் (தாஸ்) ஆரியரத்ன, லால்சிறி ஆரியதிலக, விபுலானந்தர் வீதி, வாழைச் சேனை)
★ 2ஆம் லெப்டினன்ட் புவியழகன் (லுவிஸ், மாத்தூண் வாழைச்சேனை)
★ 2 ஆம் லெப்டினன்ட் இராசன் (வல்லிபுரம் கேமராஜா கோப்பாய்)
★ 2ஆம் லெப்டினன்ட் ஆண்டகை (சிவசுந்தரம் சுரேஸ்குமார் கும்புறுபிட்டி திருக்கோணமலை)
★ சூர்வேல் (சுந்தரம்பிள்ளை விஜயகுமார், முறிகண்டி)
★ இளங்குன்றன் (அப்புலிங்கம் ஜெகதீஸ்வரன், அச்சுவேலி)
★ இராமநாதன் (சிவலிங்கம் சிவபாலன் பாரதிபுரம் கிளிநொச்சி)
★ ஞானி (இராசரத்தினம் வைகுந்தன் அல்வாய், பருத்தித்துறை)
★ குகனேஸ்வரன் (கசீலன்) (அந்தோனி ஸ்ராலின் சிலாவத்தை முல்லைத்தீவு)

ஆகியோரே வீரச்சாவை தழுவிக்கொண்ட வீரவேங்கைகளாவர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

## ஊரடங்கு உத்தரவு

(கொழும்பு)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும், யாழ். மாவட்டம் வல்வெட்டித்துறை. வவுனியா மாவட்டம் நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் நேற்று காலை ஆறுமணி முதல் காலவரையறையற்ற ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருப்பதாக சிறிலங்கா கூட்டுப் படைத் தலைமையலுவலகம் அறிவித்துள்ளது.

106 மி.மீ எம். 40 பின்னுதைப்பற்ற பீரங்கிகள் 32 இற்கு மேற்பட்ட நாடுகளில் பிரதான தாங்கி எதிர்ப்பு ஆயுதமாக உபயோகிக்கப்படுகிறது. அமெரிக்க தயாரிப்பான இந்த ஆயுதம் இந்தியா, இஸ்ரேல், பாகிஸ்தான், ஜப்பான், பிரேசில், ஸ்பெயின் முதலிய நாடுகளில் உபயோகத்தில் உள்ளன.

இந்த பீரங்கியால் ஒரு கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள டாங்கிகளைக்கூட தகர்க்கமுடியும்.

இந்தப் பீரங்கியின் நீளம் 3,4 மீற்றர். இதனுடைய நிறை 209.5 கிலோ. இதன் மூலம் நிமிடத்திற்கு ஒரு குண்டைச் சுடலாம். மோட்டார் எறிகணை போல் பயன்படுத்தும்போது ஏழு கிலோமீற்றருக்கும் கூடுதலான தூரத்திற்கு இதன் குண்டுகள் பாயக்கூடியவை.

இவற்றில் மூன்று வகையான வெடிகுண்டுகளை உபயோகிக்கலாம்.

★ டாங்கி எதிர்ப்பு உயர்சக்தி வெடிமருந்தைக் கொண்ட வெடிகுண்டு (HEAT)
★ பிளாஸ்ரிக் உயர்சக்தி வெடிமருந்தையும் பாதைச்சுட்டியையும் (Tracer) கொண்ட வெடிமருந்து
★ துருப்பு எதிர்ப்பு வெடிகுண்டு

இந்த பீரங்கியுடன் 50 கலிபர் துப்பாக்கி ஒன்று பொருத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் இலக்குவைக்கப்பட்டபின் பீரங்கிக் குண்டுகள் சுடப்படும்-

# அகோர குண்டுவீச்சு மத்தியில் உக்கிர மோதல் தொடர்கிறது

மணலாறு மாவட்டத்தில் முப்படைகளின் உதவியுடன் சிறிலங்கா இராணுவம் விடுதலைப் புலிகளுடன் தொடர்ந்து உக்கிர மோதலில் ஈடுபட்டுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இம் மோதல் இடம் பெற்றுக் கொண்டிருக்கும் பகுதிகளைக் குறியாகக் கொண்டு சிறிலங்காவின் கடற்படை, விமானப்படை, தரைப்படைகள் ஒன்றிணைந்து அகோரத் தாக்குதலை மேற்கொண்ட வண்ணமுள்ளன.

பலமணி நேரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் இம் முப்படைகளின் தாக்குதலுக்கும் மத்தியில் விடுதலைப் புலிகள் சளைக்காது கடும் எதிர்த் தாக்குதலை மேற்கொண்ட வண்ணம் உள்ளனர். இச்செய்தி அச்சிற்குப் போகும் வரை அங்கு தொடர்ந்து மோதல் இடம்பெறுவதாக அறிவிக்கப்படுகிறது.

## சர்வதேச செஞ்சிலுவையிடம் யாழ். செல்ல பயண ஒழுங்கு செய்ய பிக்குகள் கோரிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாணம் சென்று புலிகள் இயக்கத்தினரை சந்திப்பதற்கு தமது பயண ஒழுங்குகளை செய்துதருமாறு பத்து பௌத்த பிக்குகளைக் கொண்ட குழுவொன்று சர்வதேசசெஞ்சிலுவைச்சங்கத்தை கேட்டிருப்பதாக தெரியவருகிறது. இக் குழுவிற்கு சிறி அமரபுர பீடாதிபதி சித்தார்த்த தேரோ தலைமை தாங்குகிறார்.

வெளிநாடுகளில்பிக்குகள்பற்றி தவறான அபிப்பிராயம்ஏற்பட்டிருப்பதனால்இப்பயணத்தின் மூலம் அவ் அபிப்பிராயத்தை இல்லாதொழிப்பதுடன் இன்றைய பிரச்சினை தொடர்பாக புலிகள் இயக்கத்தின் நிலைப்பாடு என்ன என்பதை அறிந்து கொள்ள முடியும்என பௌத்த பிக்கு ஒருவர் தெரிவித்துள்ளார்.

எமது பயணத்திற்கான ஒழுங்குகளை செஞ்சிலுவைச் சங்கம் செய்ததும் நம யாழ்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தியாகி அன்னை பூபதியை நினைவில் கொள்வோம்

(யாழ்ப்பாணம்)

''அன்னை பூபதியின்நினைவு நாட்களாகி வரும் மார்ச் 19 முதல் ஏப்பிரல் 19 வரை வாசல் தோறும் அன்னை பூபதியின் திருவுருவை வைத்து வடிவு செய்து. அடையாளப் படுத்தஒருநாளாவது உண்ணாவிரதமிருந்து அன்னை பூபதியை நெஞ்சில்இருத்துங்கள். ஒரிடத்தில் ஒருவருக்கொருவர் அந்த நாள் நினைவுகளைப் பரிமாறிக் கொள்ளுங்கள் இக்காலத்தில் மட்டுமல்ல இனி எக்காலத்திலும் மனங்களில் இருந்து மறைய முடியாத அன்னை பூபதியை இவ் வருடமும் நினைவிற் கொள்ள நாம் அனைவரும்தயாராகுவோம்''

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவு அன்னை பூபதி தொடர்பாக விடுத்த அறிக்கையில் தெரிவிக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

அன்னை பூபதி நினைவாக அடையாள உண்ணா விரதம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. நாளை காலை 8 மணிமுதல் மாலை நாலுமணி வரையும்

[4ஆம் பக்கம் பார்க்க]

## வடக்குப் படையெடுப்பு; பெரியளவில் இருக்குமாம்

(லண்டன்)

இம்முறை வட பகுதியில் இராணுவ நடவடிக்கை பெரிய அளவினதாக இருக்கும் என்று ஒரு சிறிலங்கா இராணுவ அதிகாரியை மேற்கோள் காட்டி பி.பி.ஸி செய்தியாளர் கிறிஸ்தோபர் மொறிஸ் தெரிவிக்கிறார்

வட பகுதியில் பல இடங்களில் காலவரையறையற்ற ஊரடங்கை சிறிலங்கா இராணுவம் பிறப்பித்துள்ளது. புலிகளை வடபகுதியில் எதிர்க்கும் அதிரடி நடவடிக்கையில் சிறிலங்கா இராணுவம் முற்பட்டு வருகிறது என்ற நிலை இது என்று பி பி ஸி செய்தியாளர் கருத்துத் தெரிவிக்கிறார்.

மக்களை மதியாது இராணு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வதிவிட பயிர்ச் செய்கையில் பயிர்ப் பாதுகாப்பும் உரப் பசளைப் பிரயோகமும்

(நேற்றைய தொடர்ச்சி)

## நோய்களைக் கட்டுப்படுத்தல்:

வைரஸ் நோய்க்கு நாசினி இல்லாமையால் நோய் வந்த பயிர்களை பிடுங்கி அழிப்பதுடன், நோயைக் காவும் காவிகளை நாசினி விசிறிக் கட்டுப்படுத்தல், நோயற்ற விதை நடல், ஒட்டுதலைத் தவிர்த்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பற்றீரியா நோய்களுக்கு நாசினி பாவிக்காமல் சுழற்சிமுறைப்பயிர்ச்செய்கை, நோயற்ற விதை நடுதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்: பூஞ்சண நோய்களைப் பொறுத்தவரை ஈரலிப்பான சூழ்நிலையை குறைப்பதுடன் நிலத்தையும் மண்ணையும் தொற்று நீக்க வேண்டும். நிலத்தை தொற்று நீக்குவதற்கு நிலத்தில் குப்பை கூழங்களை இட்டுஎரிக்கலாம். நிலத்துக்கு சுடுநீர் ஊற்றலாம். மேடைகளை வெயிலுள்ள காலங்களில் நீரினால் நனைத்து, ஒரு கிழமை சூரிய ஒளி புகும் பொலிததீனினால் மூடுவதன் மூலமும் தொற்று நீக்கலாம்.

## போடோ கலவை:

நோய் வந்த பின் பாவிப்பதற்கு பூஞ்சண (பங்கசு) நாசினிக்குப் பதில் போடோ கலவை தயாரிக்கப்படுகிறது. 1 அவுன்ஸ் செப்புசல்பேற்றையும்1அவுன்ஸ்சுண்ணாம்பையும் $1\frac{1}{2}$ கலன் நீரில் கலந்து பாவிக்கலாம். செப்புசல்பேற்றையும் சுண்ணாம்பையும் வெவ்வேறாகமரத்தினாலானபாத்திரம் அல்லது பிளாஸ்ரிக் பாத்திரத்தில் கலந்த பின் சுண்ணாம்புக் கரைசலினுள் சிறிது சிறிதாக செப்புசல்பேற்றுக் கரைசலை விட்டு தடியினால் கலக்க வேண்டும். கலவையைத் தெளிக்கமுன் அமில நிலையை அறிய வேண்டும். அமில நிலையை அறிய கரைசலினுள் இரும்பு ஆணியை ஒரு நிமிடம் வைக்கும் போது செப்புசல்பேற்று ஆணியில் படிந்தால் சிறிது சுண்ணாம்பு நீரை விட்டு கலக்க வேண்டும். இவ்வாறு தயாரிக்கப்பட்ட கலவை நீல நிறமாக இருக்கும். பயிர்களுக்கு தெளிக்க முன் சீலையினால் வடித்துப் பாவிக்க வேண்டும். இக்கலவையின் மீதியை வைத்துப் பாவிக்க முடியாதாகையால் தேவையான அளவை மட்டுமே கலக்க வேண்டும்.

## வதிவிடப் பயிர் செய்கையில் உரப்பசளைப் பிரயோகம்

எருவகை, கூட்டெரு, இலைகுழை (பசுந்தாட் பசளை) போன்றவற்றை இயற்கைப்பசளை என்றும், யூரியா, அமோனியம் சல்பேற்று, பொட்டாஸ், பொஸ்பரஸ் போன்றவற்றை உரப் பசளை என்றும் பொது வழக்கில் அழைக்கின்றோம். உரப் பசளைக்கான விலை உலக சந்தையில்அதிகரித்தமை உரப் பசளைக்கான மானியம் நீக்கப்பட்டமை, இராணுவத் தடை, அதிகரித்த போக்கு வரத்துசெலவு ,போன்ற காரணங்களால் உரப்பசளையின் விலை பல மடங்கு அதிகமாகும். யாழ். குடா நாட்டில் யூரியாவை அதிகளவு பாவித்தமையால் நன்னீர் மாசு அடைந்துள்ளது. வதிவிடப் பயிர்ச் செய்கையானது உள்ளூர் வளங்களை பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளமையாலும் நாம் உரப் பசளைகளைத் தவிர்த்து எமது பிரதேசத்தில் உள்ள இயற்கைப் பசளைகளைப் பயன் படுத்த வேண்டும்.

## இயற்கைப்பசளை

களித் தரைகளுக்கு இயற்கைப் பசளை இடுவதால் நீரை வடிய விட்டு காற்றாட்டலை ஏற்படுத்துவதுடன் வேர் ஊடுருவும் தன்மையை அதிகரிக்கச் செய்கிறது. மணல் தரைகளுக்கு இயற்கைப் பசளை இடும்போது நீரைப் பிடித்து வைக்க உதவுவதுடன் நிலத்திலுள்ள போசணைப் பொருள்களைப் பிடித்து வைத்திருக்கிறது. நிலத்திலுள்ள நன்மை செய்யும் நுண்ணுயிர்களின் வளர்ச்சி ஊடகமாகவும்,உணவாகவும் பயன்படுகிறது. இத்தகைய நன்மைகள் எதுவுமே உரப்பசளையில் இல்லை என்பதை மனதில் கொள்ள வேண்டும். ஆயினும் உரப் பசளையை விட அதிகளவில் இயற்கைப்பசளை இட வேண்டும். ஆட்டெருவும். கோழி எருவும் பயிர் வளர்ச்சிக்குரிய போசணைகளைக் கூடிய அளவில் கொண்டவை. 500 கிலோ கிராம் நிறையுடைய மாட்டிலிருந்து வருடத்துக்கு 9-10 தொன் (2 லோட்) எருவைப் பெறலாம், மாட்டின் சிறு நீரும் சிறந்த ஒரு பசளையாகும். சிறு நீர்த்தொட்டி அமைத்தோ அல்லது படுக்கைப் பொருள் பாவித்தோ சிறுநீரைப் பெறலாம். மண்ணினால் அமைக்கப்பட்ட மாட்டுத் தொழுவமாயின் மேல் மண்ணை செதுக்கி எடுத்துப் பாவிக்கலாம்: ஆடு மாடுகளை பயிர் செய்யும் இடங்களில் கட்டுவதால் (பட்டியடைத்தல்) எருவும், சிறுநீரும் நேரடியாக நிலத்துக்குக் கிடைக்கிறது. உயிர்வாயு தயாரிப்பின் போது வெளிவரும் கழிவும் ஒரு சிறந்த பசளையாகும். குளங்கள் இறைத்துத் துப்புரவாக்கும் காலங்களில் குளத்துப் பொருக்கை எடுத்து பயிர்களுக்கு இடலாம். பூவரசு, ஆவரசு, வேம்பு எருககலை, காவிளாய், சணல், காட்டுச் சூரியகாந்தி, பாவட்டை போன்ற பசுந்தாட்பசளைகளைப் பயிரிட முன் நிலத்துக்கு இடலாம். பயிர்ச் செய்கை ஆரம்பிக்க முன் சணலைப் பயிரிட்டு தாட்டு விடலாம்.

## கூட்டெரு தயாரித்தல்

குசினிக் கழிவு தொடங்கி பண்ணைக்கழிவு வரையிலுள்ள கழிவுகளையும் பயன்படுத்தி 3-$3\frac{1}{2}$ மாதத்தில் அதிக வளமுள்ள கூட்டெருவைப் பெற்றுக்கொள்ளலாம். தெரு ஓரங்களில் கொட்டப்படும் கழிவுகளைக் கூட்டெருவாக மாற்றுவதனால் சுகாதார கேடுகளைத் தவிர்த்துக் கொள்ளலாம். காய்ந்த தடிகள், பொலித்தீன்வகை, கல் ஆகியன தவிர்ந்த கழிவுகளைப் பயன்படுத்தலாம். பசிய தடி தண்டுகளை சிறிய துண்டுகளாக வெட்டி பயன் படுத்தலாம் உங்களிடம் சேரும் கழிவுப் பொருள்களுக்கு ஏற்ப குழிகளின் நீள அகலத்தை அமைத்துக் கொள்ளலாம். குழியின் மேல் பாகம் அகலமாகவும், கீழ்ப் பாகம் ஒடுங்கியதாகவும் இருக்கக் கூடியவாறு அமைத்து குழிகளை 10 நாட்களில் கழிவுகளினால் நிரப்பக் கூடியதாகவும் இருக்க வேண்டும். கழிவுப் பொருள்களை நிரப்பும் போது குழியின் ஒரு பக்கத்தில் புரட்டுவதற்காக சிறிது இடைவெளி விடவும். 20- 25 சமீ உயரத்துக்கு கழிவுப் பொருள்களை ஒரு படையாகவும் அதன் மேல் 2-3 ச. மீ உயரத்துக்கு பசிய பொருள்களான சாணம், சிறுநீர்,சிறுநீர் ஊறிய மண், உக்கிய எரு, உக்கிய கூட்டெரு என்பவற்றை ஒரு படையாகவும் இட்டு மாறி மாறி இரு படைகளினாலும் குழியை நிரப்ப வேண்டும். பசிய பொருள்கள் வசதிப்படாதவிடத்து உக்கிய எருவையும் சாம்பலையும் நீரில் கரைத்து கழிவுப் படைகளுக்கு ஊற்றலாம். குழியில் காற்றோட்டத்தை ஏற்படுத்துவதற்காக 1-2 தடியை இடையே வைத்து குழியை நிரப்பிய பின் எடுத்து விடலாம்.

குழி நிரம்பி 2 ஆம், 4 ஆம், 8 ஆம் கிழமை என மூன்று தரம் குழியிலுள்ள கழிவுகளைப் புரட்டி விடவேண்டும். இறுதியில் புரட்டும் போது குவியலாகப் புரட்ட வேண்டும். தேவையானபோது ஈரப்பற்று இருக்கக் கூடியவாறு நீர் தெளிக்க வேண்டும். தயாரிக்கப்பட்ட கூட்டெருவைப் பயிர்களுக்கு விரைவாகப் பயன்படுத்தாவிடில் போஷணைப் பெறுமானம் குறைந்து விடும். கூட்டெருக் குழிகளை நீர் தேங்காத இடங்களில் அமைக்க வேண்டும். குழியைப் புரட்டுவதற்கு வசதியில்லாவிடில் குழியைநிரப்பி மேல் பகுதியை சாணம், களி மண், கொண்டு மெழுகிவிடலாம். இம்முறையில் 6-7 மாதத்தின் பின்பே கூட்டெரு கிடைக்கும். கூட்டெருக் குழியை அமைக்க முடியாதவர்கள் தகரப்பீப்பாக்களையோ மரப்பெட்டிகளையோபயன்படுத்திக்கொள்ளலாம்.

## திரவ வளமாக்கி தயாரித்தல்

கூட்டெரு தயாரிக்க அல்லது வேறு இயற்கை எரு போதிய அளவுபெற வசதியில்லாதவர்கள் இம்முறையைக் கையாளலாம். உடனடியாக பயிர்களால் எடுக்கக் கூடிய போசணைகளைக் கொண்ட 45 கலன் எண்ணெய் பீப்பாவில் நீரை நிரப்பி அதனுள் வதிவிட வேளாண்மையில் வளர்க்கப்படும் முயல் எரு, கோழி உரம், ஆட்டெரு,மாட்டெரு, மரச்சாம்பல், எலும்புத்தூள் என்பவற்றை ஒரு சாக்கினுள் இட்டுக் கட்டி இரு கிழமைகள் வைப்பதன் மூலம் திரவ வளமாக்கியை பெற்றுக் கொள்ளலாம். பெரலில் குறுக்கே ஒரு சட்டத்தை வைத்து அதில் சாக்கைக் கட்டித் தொங்கவிடலாம். அதிக நைதரசனைக் கொண்ட இப்பில் இப்பில், கிளிறிசிடியா, காவிளாய் என்பவற்றில் ஒன்றை வேப்பம் குழையுடன் சேர்த்து சாக்கிலிட்டுப் பீப்பாவின் அடிப்பகுதியில் வைத்து கல் ஒன்றினால் பாரம் ஏற்றி விடலாம். இதுவும் 2 கிழமையில் பாவிக்கக் கூடிய திரவ வளமாக்கியாக மாறும். இத் திரவ வளமாக்கிகளில் 1 பங்குக்கு 3 பங்கு நீர் சேர்த்து இளம் தாவரங்களுக்கும் மண்ணுக்கும் பூவாளியினால் தெளிக்கலாம்.

வதிவிட வேளாண்மை எமது முயற்சியிலும் மனவுறுதியிலும் தங்கியுள்ளது. ''முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்'' எனும் முதுமொழிக்கு அமைய நாமும் இம்முயற்சியில் ஈடுபட்டு எமது சொந்தக் காலில் நின்று பட்டினி ஒழிப்புக்கு எம்மால் இயன்ற பங்களிப்பை வழங்குவது நமது கடமையாகும்.

- தமிழீழ ஆய்வு நிறுவனம்


## வரி விளம்பரம்

**ENGLISH GRAMMAR SPOKEN ENGLISH**

முதலிலிருந்து ஆங்கிலம் கற்பிக்கப்படுகின்றது. மூன்று மாதப் பயிற்சி TOEFL ESOL, GELT, TACEP செய்பவர்களுக்கும் ஏற்றவாறு கற்பிக்கப்படுகின்றது. V. N. KANDASAMY 87, திருநெல்வேலி றோட், கொக்குவில். (230ι)

**வைத்தியம்**

30 வருட அரசாங்க சேவையில் உள்ள வேலணை வைத்தியசாலை வைத்தியர் எமது தனியார் வைத்தியசாலையில் மாலை 4 - 6 வரை கடமை புரிகிறார் என்பதை அறியத் தருகிறோம் Dr ஆ. திருநாவுக்கரசு RMO, MACF Dip, Ac, Galu Dr ச. சுபாஸ்கரன் சிறிசாயி டிஸ்பென்சரி றீகன் நகர், நாவாந்துறை. (2305)


# களனி டயர் கம்பனி ஊழியர் வேலைநிறுத்தத்தில்குதிப்பு

களனி டயர் கம்பனியில் 60 சதவீதமான பங்குகளை திறைசேரி விற்றதனையடுத்து கம்பனியின் அந்தஸ்து மாறியுள்ளதால் தமக்குநஷ்ட ஈடு வழங்கவேண்டும் என்று கோரியும் ஊழியர்களின் வேலைக்கு சட்டரீதியான பாதுகாப்பு கோரியும் களனி டயர்கம்பனியில் இப்போது ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ளனர்.

இவ்வேலை நிறுத்தம் தொடர்பாக தொழில் ஆணையாளர் டி வீரக்கோன் குறிப்பிடுகையில்.

திறைசேரியின் செயலாளருக்கு பங்குகள் விற்கப்பட்டு பொதுகம்பனியாக களனி டயர்கூட்டுஸ்தாபனம் இருந்தது. அப்போதிருந்தே கம்பனி நிலையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டது.ஆனால் இப்போது 60 வீதமானபங்குகள் விற்கப்பட்டுள்ளன. இரு வருடங்களுக்குள் எந்த ஒரு ஊழியரும் கம்பனியிலிருந்து நீக்கப்படக் கூடாது என திறைசேரிக்கும் பங்குகளை வாங்கியோருக்குமிடையில் ஒப்பந்தம் செய்யப்பட்டது இதற்கு புறம்பாக ஊழியர் வேலை நீக்க விசேடசட்ட விதியை மீறி எதுவும் செய்யமுடியாது.

மேலும் தவறான முறையில் ஒருவர் வேலைநீக்கம் செய்யப்பட்டால் நஷ்ட ஈட்டுக்கு வரையறைகள் கிடையாது எனவும் ஊழியர்களை வேலையிலிருந்து நீக்கும் விசேடசட்ட விதிகளின்படி ஒழுக்க ரீதியான காரணங்களின்றி வேறெந்த காரணங்களுக்காகவும் வேலைநீக்கம் செய்யமுடியாது எதற்கும் தொழில் ஆணையாளரின் முன்அனுமதி பெறப்படல் வேண்டும் என திரு வீரக்கோன் தெரிவித்தார்


## அறிவித்தல்

11. 3. 1992 இல் பிரசுரமான கிராம உத்தியோகத்தர் போட்டிப் பரீட்சைக்கான முடிவு திகதி 24 03. 92 நண்பகல் 11. 00 மணிக்கு முன்னர் எனக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைப்பதற்காக நீடிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க அதிபர்
யாழ்ப்பாணம்.

(சி/ 4064)

## காணவில்லை

**ஐயாத்துரை ஸ்ரீகாந்தராஜன்**

கொடிகாமத்தைச் சேர்ந்த ஐயாத்துரை - ஸ்ரீகாந்தராஜன் 2. 03. 92 -ல் இருந்து C 50 கொண்டா சாம்பல் கலர் மோட்டார் சைக்கிளுடன் கொடிகாமத்திற்கும், தாண்டிக்குளம் தடைமுகாமுக்கும் இடையில் காணாமற் போயுள்ளார்.

உயரம் 5' 5''
வயது 21
நிறம் சிவப்பு

தலைமுடி கறுப்பு மேனி இழுத்தவர் பச்சைச்சாறம்;


வேலை இழந்த

# அரசாங்க ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும்

நீர்கொழும்பு

# கத்தோலிக்க திருச்சபை உலகின் கவனத்தை ஈர்ப்பு

சின்னம்

# சூட்டும் விழா

யாழ். செங்குந்த இந்துக் கல்லூரி சாரணர் குழுவின் புதிய அங்கத்தவர்களுக்கான

## வேலை இழந்த

# அரசாங்க ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும்

1980ஆம் ஆண்டு யூலை மாத வேலை நிறுத்தத்தில் பங்கு பற்றியதால் வேலை இழந்த அரசாங்க ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

பரீட்சைக்கு தோற்றி அல்லது நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி நியமனம் பெறத் தகுதியிருந்தும் வேலை நிறுத்தத்தில் பங்கு கொண்டமை காரணமாக நியமனம் பெறாமல் இருந்தால் அவர்களுக்கு முன்னைய திகதியிலிருந்தே நியமனம் வழங்க முடிவு செய்யப்பட்டிருப்பதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் கூறியுள்ளார். பதவி உயர்வுகளைப் பொறுத்த வரையிலும் கூட இதே முறை பின்பற்றப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

## புகையிரத சேவை நேரமாற்றம்

(கொழும்பு)

வவுனியாவிற்கான இரவு புகையிரத சேவையின் நேரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் முதல் கொழும்பு புகையிரத நிலையத்திலிருந்து புகையிரதம் புறப்படும் நேரம் இரவு ஒன்பது நாற்பது என அறிவிக்கப்பட்டுள்ளது.

## 8-ம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 07 |  | 17 |
| — | | — |
| 10 | | 03 |
| — | | — |
| 1951 | | 1984 |

### நாகபூஷணிதேவி மாணிக்கராசா

திதி: 18. 03. 1992

அன்பின் உருவமாய் பண்பின் சின்னமாய் எங்கள் அனைவருக்கும் திகழ்ந்த தேவியே! மீளாத்துயிலால் எம் அனைவரையும் மாளாத்துயரிலும் வாடவைத்து விட்டு இறைவனடி சேர்ந்து எட்டு ஆண்டுகளானாலும் உங்கள் நினைவு எங்கள் உள்ளங்களிலிருந்து என்றும் நீங்காது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

40/1 இராமநாதன் வீதி,<br>யாழ்ப்பாணம்.<br>(சி4047)

உங்கள் பிரிவால் வாடும்,<br>அன்புக் கணவர், பெற்றோர்,<br>சகோதரன், உறவினர்.

## நீர்கொழும்பு

# கத்தோலிக்க திருச்சபை உலகின் கவனத்தை ஈர்ப்பு

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பில் கத்தோலிக்க திருச்சபை எயிட்ஸ் நோய்க்கு எதிராக மேற்கொண்ட முயற்சிகள் உலகின் கவனத்தைக் கவர்ந்துள்ளன.

பிரசித்திபெற்ற பத்திரிகையான றீடேர்ஸ் டைஜெஸ்ட், எயிட்ஸ் நோய் பரவுவதைத் தடுப்பதற்கு கத்தோலிக்க திருச்சபை மேற்கொண்ட முயற்சிகள் பற்றிய விவரணக் கட்டுரை ஒன்று எழுத பால் றிவாலி என்ற விசேட பிரதிநிதியை நீர்கொழும்புக்கு அனுப்பியுள்ளது.

கட்டுரை றீடேர்ஸ் டைஜெஸ்ட் ஆகஸ்ட் மாத இதழில் வெளிவரும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## சின்னம் சூட்டும் விழா

யாழ். செங்குந்த இந்துக் கல்லூரி சாரணர் குழுவின் புதிய அங்கத்தவர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவம் வரும் வெள்ளிக்கிழமை (20.3 92) காலை 11.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட, உதவி மாவட்ட ஆணையாளர்களும், திரிசாரணர்குழு நல்லூர்த் தலைவர்களும், பெற்றோர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

கொடிகாமத்தைச் சேர்ந்த ஐயாத்துரை - ஸ்ரீகாந்தராஜன் 2. 03. 92 -ல் இருந்து C 50 ஹொண்டா சாம்பல் கலர் மோட்டார் சைக்கிளுடன் கொடிகாமத்திற்கும், தாண்டிக்குளம் தடைமுகாமுக்கும் இடையில் காணாமற் போயுள்ளார்.

உயரம் 5' 5''<br>வயது 21<br>நிறம் சிவப்பு

தலைமுடி கறுப்பு மேனி இழுத்தவர் பச்சைச்சாறம்; வெள்ளையும்கறுப்பும் கலந்த ரீ சேட்டுக்கு மேல் றோஸ் கலர் கோடன் சேட்டும் அணிந்திருந்தார். அவரைப் பற்றிய விவரம் தெரிந்தோர் தயவு செய்து கீழ்க் காணும் முகவரிக்குத் தகவல் தரும்படி கருணை கூர்ந்து கேட்டுக் கொள்கின்றோம்.

சகோதரன்<br>ஐ. ஸ்ரீசரன்<br>தபால் நிலையம்<br>கொடிகாமம்.

அல்லது:<br>கவிதா ரீ றூம்,<br>கொடிகாமம்.

(2306)

## கிரனைட்டுகளைக் கண்டதும்

# விரைவாக ஓட்டினேன் வேட்டுகள் வழிமறித்தன

### ஜீப் சாரதி சாட்சியம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலிருந்து சனிக்கிழமை ஈயத்தகடுகளை ஏற்றி வந்த டிராக்டருக்கு பாதுகாப்பாக பின்னால் ஜீப்பில் வந்து கொண்டிருந்தோம். அரை வாசித்தூரம் சென்றதும் இரு கிரனைட்டுகளை வீதியின் மத்தியில் கண்டேன். அதைக்கண்டதும் எனது வாகனத்தை விரைவாக ஓட்டத் தொடங்கினேன். அப்போதுபாதையில் இருபக்கமும் இருந்து கிரனைட் வீசப்பட்டதோடு துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன. ஜீப்பின் முன் ஆசனத்தில் இருந்த இரு றிசேவ்சப் இன்ஸ்பெக்டர்களும் துப்பாக்கி வேட்டுக்களை அடுத்து எனது மடியில் சாய்ந்தனர்

இவ்வாறு கடந்த சனிக்கிழமை பொலிஸ்ஜீப் மீது புலிகள் நடத்திய தாக்குதலின் போது காயமுற்ற பொலிஸ் ஜீப் சாரதி விஜிதசிங்கா தெரிவித்தார்.

இவர் தான் „சுவரொன்றிற்கு பின்னால் மறைந்திருந்த புலிகள் என் மீது சுட்டதனால் எனது தோள்பட்டையில் காயமேற்பட்டுள்ளது. ஜீப்பின் பின்னால் அமர்ந்திருந்தவர்களும் இலிகாகினர் என்றும் இரு இன்ஸ்பெக்டர்கள் கொல்லப்பட்டது தொடர்பான சாட்சியத்தில் விளக்கமளித்தார்,

# வவுனியா - திருமலை தினசரி பஸ் சேவை

(வவுனியா)

வவுனியாவிலிருந்து திருக்கோணமலைக்கு தினசரி பஸ் சேவை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக தெரியவருகின்றது. வவுனியா போக்குவரத்துச் சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இச் சேவையில் தாண்டிக்குளத்தில் தினமும் பத்து மணிக்கு புறப்படும் இப்பஸ் பன்குளம் வழியாக திருக்கோணமலையை மாலை நான்கு மணிக்கு சென்றடையும். இந்த பஸ் மறுநாள் திருக்கோணமலையில் காலை எட்டு மணிக்கு புறப்பட்டு வவுனியாவை பிற்பகல் இரண்டு மணிக்கு வந்து சேரும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# புதிய உயர் கல்லூரி

(New College of High Studies)

ஆரியகுளம் சந்தி,<br>யாழ்ப்பாணம்.

G.A.Q பேராதனை 1992

பல்கலைக்கழக பதிவினை மேற் கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்களை நேரில் பெற்றுக் கொள்ளவும்

விண்ணப்ப முடிவு திகதி:

**31. 03. 1992**

விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன

B A. December

விரிவுரைகள் ஆரம்பம்

**21. 03. 92**

[காலை 10 மணி]

நிர்வாகி<br>S. அருள்நங்கை

(சி 4066)

# நினைவு கூருகின்றோம் 1992-03-18

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் அம்பாறை, கல்முனைப்பகுதியில் முகமூடி நபரால் இனங்காட்டப்பட்ட நிலையில் சிறிலங்கா காவற்றுறையினருடன் ஏற்பட்ட மோதலின் பின் சயனைற் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**விஸ்வம்** ( முத்துலிங்கம் கருணாநிதி - வன்னியர் வீதி, கல்முனை - 02, அம்பாறை )

1991ஆம் ஆண்டு தாவளம்பிட்டியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட மிதிவெடி விபத்தில் எம்மைப் பிரிந்த -

**மேஜர் ராஜித்** ( செ. கணேசன் - சித்தாண்டி, மட்டக்களப்பு )

முல்லைத்தீவில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**கவி** ( வேலாயுதம் பிரபாகரன் - புன்னை, நீராவியடி, விசுவமடு, முல்லைத்தீவு )

மன்னாரில் சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

**மித்திரன்** ( கந்தசாமி சிறிக்குமார் - அம்மன்வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் )

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(சி/4063)

நல்லூர் கிளை நூலகம்
யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு

ஒரு மனிதனுக்கு சுதந்திரத்தைத் தருவது அவனுடைய வசதி, வருவாய்ப் பெருக்கம் அல்ல; அவனுடைய தேவையின் சுருக்கமேயாகும்.

- வில்லியம் கார்பட்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 18-03-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05

# பிரிக்க முடியாத தமிழக உறவு

தமிழ் நாட்டில் தலைவர் பிரபாகரனுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் ஆதரவு பெருகி வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. தமிழகத்தில் உள்ள இருபதிற்கும் மேற்பட்ட அமைப்புக்கள் - வன்னியர்களின் பாட்டாளி மக்கள் கட்சி, திராவிடர் கழகம் உட்பட அரசியல் கட்சிகளும், வேறு பல அமைப்புக்களும்-புலிகளுக்கு வெளிப்படையாகவே தமது ஆதரவைத் தற்பொழுது தெரிவித்து வருகின்றன. தமிழ் தேசியவாத இயக்கத்தின் உண்மையான பிரதிநிதிகள் விடுதலைப்புலிகளே என்பதையும், உலகத் தமிழினத்தின் தலைவர்களும் அவர்களே என்பதையும் இவ்வமைப்புக்கள் பகிரங்கப்படுத்தும் முயற்சியில் தற்பொழுது ஈடுபட்டுள்ளன.

ராஜீவ்காந்தியின் மரணத்தைத் தொடர்ந்து தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளுக்கு எதிராகக்கட்டவிழ்த்து விட்ட அடக்கு முறையாலும், பிரசாரத்தாலும் இனித்தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகள்பற்றிய பேச்சே எடுக்கப்படாது என எண்ணியவர்களுக்கு இது அதிர்ச்சியாக இருக்கலாம். ஆனால், தமிழகத்தில் விடுதலைப்புலிகளுக்கும், தமிழரின் தேசிய இனவிடுதலைப் போராட்டத்திற்கும் மக்கள் மத்தியில் கிடைக்கும் ஆதரவை எவரும் தடுத்து நிறுத்திவிட முடியாது என்பதையும் இது உணர்வு ரீதியான பிணைப்பு என்பதையும் சகலரும் புரிந்து கொள்ள வேண்டும்.

ராஜீவ்காந்தியின் மரணத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட புலிகளுக்கு எதிரான கீழ்த்தரமான பிரசாரத்தையும், அதன் மூலம் உருவாக்கப்பட்ட அனுதாப அலையையும் வைத்து செல்வி ஜெயலலிதா, விடுதலைப்புலிகள் மீதும், இலங்கைத் தமிழ் அகதிகள் மீதும், தனது அரசியல் எதிரிகள் மீதும் தமிழகத்தில் உள்ள புலிகள் ஆதரவு சக்திகள் மீதும் கடும் நடவடிக்கைகளை எடுக்கக் கூடியதாக இருந்தது. அப்போதுள்ள அரசியற் சூழ்நிலையே அவரின் அரசியல் பழிவாங்கல்களுக்கு வாய்ப்பாக இருந்தது.

ஆனால், தற்பொழுது அரசியற் சூழ்நிலை மாறத் தொடங்கி விட்டது. ஜெயலலிதா அரசாங்கத்தின் கண்மூடித்தனமான நடவடிக்கைகளையும் 'தடா' சட்டப்பிரயோகத்தையும் பகிரங்கமாகத் தமிழக மக்கள் கண்டிக்கத் தொடங்கி விட்டதோடு ஜெயலலிதாவின் நடவடிக்கைகள் அரசியற் பழிவாங்கல்கள் என்பதையும் உணரத் தொடங்கியுள்ளனர்.

விடுதலைப்புலிகள் ஒரு தசாப்தத்திற்கு மேலாகவே தமிழ்நாட்டுடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தார்கள். அவர்களுக்கும் தமிழக மக்களுக்கும் இருந்த உறவு நட்பு ரீதியானதும் சகோதர வ[illegible]

# பல்கலைக்கழக மாணவர்கள் கைது

## விரிவுரையாளர் தலைமையில் ஆட்சேபம்

(கொழும்பு)
பிரசைகள் முன்னணியினருடன்கலந்துரையாடிக்கொண்டிருந்த பதினாறு பல்கலைக்கழக மாணவர்களையும் விரிவுரையாளர்களையும் கைது செய்தது தொடர்பாக கலாநிதி நளின் டி சில்வா தலைமையில் மாணவர்கள் ஆட்சேபம் தெரிவித்தனர்.

சுமார் 150 மாணவர்கள் தமது சகபாடிகளை விடுதலை செய்யக்கோரி விஞ்ஞான பீடத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அரசாங்கம் எம்மை இனவாதிகள், பயங்கரவாதிகள் என்று கூறித் தண்டிக்கப் பார்க்கிறது என்று மாணவர் சங்கத்தலைவர் றோகன் குணவர்த்தனா தெரிவித்தார்.

பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கத் தலைவர் கலாநிதி நளின் டி சில்வா கருத்து தெரிவிக்கையில்மாணவர் சட்டபூர்வமான அமைப்பான பிரசைகள் முன்னணியினருடன் பேசிக்கொண்டிருந்தார்கள் என்றார்.

மாணவர்களை விடுதலை செய்யத் தவறும் பட்சத்தில் அவர்களுக்கெதிரான குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்யும்படி கலாநிதி நளின் டி சில்வா கேட்டுள்ளார்.

### இலங்கை சாரணர் சபையை

# நீதிமன்றில் ஆஜராகும்படி மேலதிக நீதிபதி ஆணை

(கொழும்பு)
வாடகைக் குடியிருப்பாளரின் வீட்டை இடித்து அழித்த குற்றச்சாட்டின் பேரில் சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தையிலுள்ள இலங்கை சாரணர் சபையை நீதிமன்றத்தில் ஆஜராகும்படி கொழும்பு மேலதிக நீதிபதி சந்திரதாஸா நாணயக்காரா ஆணை பிறப்பித்துள்ளார்.

மனுதாரின் தகப்பனார்செ. சி.பீரிஸ்1948இல் இருந்து வாடகைக் குடியிருப்பாளராகஇருந்தாரென்றும் அவரைத்தொடர்ந்து அந்த வீட்டில் பிறந்து வளர்ந்த மனுதார் அதில வாடகைக் குடியிருப்பாளராகத் தொடர்ந்து இருந்து வந்தாரென்றும் மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனுதார் வீட்டிலில்லாத சமயம் பார்த்து 25 பெப்ரவரி 1991இல் எதிர் மனுதாரரான இலங்கை சாரண சபை நவீன இயந்திரங்களைப் பாவித்து குடியிருந்த வீட்டை சட்ட விரோதமான முறையில் இடித்துத் தரைமட்டமாக்கியதாகவும், இதனால் மனுதாரர் வீடுவாசல், தளபாடங்கள், பெறுமதியான நூல்களை இழந்து நிர்க்கதியாய் நிற்பதாகவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பேடன் பவல் பிரபுவின் உயர்ந்த குறிக்கோளைக் கொண்டியங்கும் சாரணர் சபை பேராசை கொண்டு இந்த ஆதனத்தை விற்றுவிட முயற்சிக்கிறது. ஆகவே பிரச்சினைக்குரிய ஆதனத்தை விற்காமல் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கும்படியும், இழப்பீட்டுத் தொகையாக 9, 00, 600 ரூபா வட்டியுடன் வழங்கும் படியும் மனுவில் கோரப்பட்டுள்ளது.

இலங்கை சாரணர் சபையை வரும் ஏப்பிரல் 2-ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகும்படி நீதிபதி ஆணை பிறப்பித்துள்ளார்.

### மீனம்பாக்க விமான விபத்து

# அறிக்கை அனுப்புமாறு சிறிலங்கா வற்புறுத்து

(கொழும்பு)
சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் ஜனவரி 10 ஆம்திகதி விபத்துக்குள்ளாகியவிமானம்குறித்தபூர்வாங்க அறிக்கையை அனுப்பும்படி சிறிலங்கா சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரிகள் இந்தியாவை வற்புறுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களம் பலமுறைகேட்டும் இந்திய சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் செவிசாய்க்காமல் இருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவிலிருந்து அறிக்கை கிடைக்கத் தாமதமேற்படுவதால் ஏயர்லங்கா விசாரணைச்சபை அதன் அறிக்கையை வெளியிட முடியாதிருக்கிறதாம்.

# சந்திரிகாவைத் தடுக்க அனுரா குழுவினர் முயற்சி

(கொழும்பு)
திருமதி சந்திரிகா குமாரணதுங்கா பாதயாத்திரையில் கலந்து கொள்வதைத் தடுக்க

சாவினால் நாளொன்றுக்குப் பதினைந்து மைல் நடக்கமுடியுமானால், அன்னால் முப்பது மைல் நடக்க முடியும்

# இராணுவ வாகனங்கள் தவறான முறையில் பாவனை

(கொழும்பு)
இராணுவத்தினர் வாகனங்களைத் தவறான முறையில் பாவிப்பதாக நீதிமன்ற வழக்கொன்றில் வெளியான தகவலையடுத்து இராணுவம் விசாரணை மேற்கொண்டுவருகிறது.

வாகனங்களைத் தவறான முறையில் பாவிப்பதை மறைக்கும் வகையில் இராணுவத்தின் பதிவேடுகளில் மாற்றம் செய்வது தொடர்பாக கடும் நடவடிக்கை எடுக்குமாறு நீதிபதி இராணுவத்தைப் பணித்ததைத்தொடர்ந்தே விசாரணை மேற்கொள்ளப்படுகிறது.

ஜூலை 15, 1991 இல் பக்றோ கீவ் 32 சிறி 2193ல் 241 கிலோ மீற்றர் ஓடியதாக பொய்யான பதிவுசெய்துள்ளதாக நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த இராணுவச் சிப்பாய் திலகானந்தா ஒப்புக் கொண்டார். தங்கக்கடத்தல்வழக்கில்தற்போது சம்பந்தப்பட்டிருக்கும் மேஜர் பத்மசிறி உடுகம்பொல இதை அனுமதித்துள்ளார் என்றும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

# மலையக மக்களுக்கு எதிராக சிங்கள இனவாதப் பிரசாரம்

## - அமைச்சர் தொண்டமான் -

இனப்பிரச்சினைத் தீர்விற்காக இ. தொ கா. சமர்ப்பித்த யோசனைகள்: மலையகப் பகுதிகளில் தீவிரவாத நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்டவர்களென கூறிச் சிலர் தடுத்து வைக்கப்பட்டு அவர்களை சாட்டாக வைத்துக் கொண்டு இனவாதப் பிரசாரத்தை முன்னெடுத்து ஊக்குவிக்கும் போர்வைகளாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறு இ. தொ. கா. தலைவர் திரு. எஸ். தொண்டமான் கடந்த ஞாயிற்றுக்கிழமை நுவரெலியாவில் நடைபெற்ற 31 ஆவது இ. தொ. கா. மாநாட்டில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

மிகவும் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் தொடர்ந்து பேசிய தொண்டமான் —

இந்தியத் தமிழ் சமூகத்திற்கெதிராக என்றுமே செயற்பட்டு வந்தவர்களே இச் சமூகத்தின் சமூக பொருளாதார

செயற்படுகின்றன. இந்நிலையில் நாட்டில் ஒற்றுமை, சமாதானம் நிலவவும் இ. தொ. கா. தொடர்ந்து போராடத் தயங்காது இலட்சியத்திலிருந்து பின்வாங்க மாட்டாது எனக்குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் தோட்டத் தொழிலாளர்களின் வருவாயையும் நலவுரிமைகளையும் அதிகரிக்கச் செய்யும் சக்தி வாய்ந்த திட்டமாக தோட்ட சீரமைப்பு அமைந்துள்ளது. தோட்ட நிர்வாகங்களை தனியாரிடம் கையளிப்பதை பகிரங்கமாக ஆதரித்து நிற்பது இ. தொ. கா மட்டுமே. இதன்மூலமேவேலை வாய்ப்பு அதிகரிக்கப்பட்டு கொத்தடிமை நீங்கி புதிய சமூக அந்தஸ்தைப் பெறமுடியும்.

நாட்டின் இனப்பிரச்சினை

நீடிக்க யுத்தத்தின் விளைவாக இந்நாடு அனுபவித்து வரும் பெரும் பொருளாதாரச் சுமைகளை உணர்ந்து பெருந்தொகையான மக்கள் மீது யுத்தம் சுமத்தியிருக்கும் சொல்லொணா வேதனைகளினால்துயரம் கொண்டிருக்கும் இந்நெருக்கடியில் நிலைத்து வரும் தேக்க நடவடிக்கைகளைத் தகர்ப்பதற்கு நாம் யோசனைகளை முன்வைத்துள்ளோம். ஒரு பேச்சு வார்த்தை நிலைப்பாட்டை மதிப்பிடுவதற்கான ஒரு ஆரம்ப யோசனைகளாகவும் கலந்துரையாடல்களை ஆரம்பிப்பதற்காகவுமே நாம்இனப் பிரச்சினை தொடர்பான யோசனைகளை முன்வைத்தோம்.

ஆனால் நாட்டின்பிற்போக்குச்சக்திகள் இந்த யோசனைகளை இனவாத பிரசாரத்

# குளங்கள் புனரமைப்பு

தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் தேச நிர்மாணிகள் பிரிவு இவ்வருடத்தில் தமிழீழத்தின் பல பகுதிகளிலும் பல நிர்மாணத் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளது.

யாழ். குடாநாட்டில் சிறு குளங்களைப் புனரமைத்தல், வாய்க்கால்கள், உவர் நீர்த் தடுப்பு அணைகளைப் பராமரித்தல், கட்டிடத் தேவைக்கான சுண்ணாம்பு உற்பத்தியை விரிவுபடுத்தல். வன்னி மாவட்டத்தில் பெரிய நீர்ப்பாசனக் குளங்களைப் புனரமைத்தல், வன்னிப் பிராந்தியத்தில் செங்கட்டி உற்பத்தி செய்தலும், ஊக்குவித்தலும், பறங்கியாறை திசை திருப்புவது தொடர்பான நிலஅளவு வேலைகளை மேற்கொள்வது போன்ற திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

# கே. டானியல் நினைவு தினம்

(கொழும்பு)
அமரர் கே. டானியலின் 6 ஆவது நினைவு தினம் வரும் ஞாயிறு காலை 10 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமை தாங்கும் இந் நிகழ்வில், பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி) பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோர் நினைவுரை வழங்குவார்கள்.

கண்மூடித்தனமான நடவடிக்கைகளையும் 'தடா' சட்டபிரயோகத்தையும் பகிரங்கமாகத் தமிழக மக்கள் கண்டிக்கத் தொடங்கி விட்டதோடு ஜெயலலிதாவின் நடவடிக்கைகள் அரசியற் பழிவாங்கல்கள் என்பதையும் உணரத் தொடங்கியுள்ளனர்.

விடுதலைப்புலிகள் ஒரு தசாப்தத்திற்கு மேலாகவே தமிழ்நாட்டுடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தார்கள். அவர்களுக்கும் தமிழக மக்களுக்கும் இருந்த உறவு நட்பு ரீதயானதும் சகோதர வாஞ்சை மிக்கதுமாகும். தமிழக மக்களுக்கு விடுதலைப்புலிகள் எப்பொழுதுமே தீங்கு செய்யவில்லை துன்பப்படுத்தியதில்லை, இதேவேளை விடுதலைப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கை என்ற போர்வையில் தமிழக அதிகார வர்க்கத்தினரே தமிழக மக்களை இம்சித்தார்கள். விசாரணை என்ற பெயரில் கொலை செய்தார்கள்; சித்திரவதை செய்தார்கள்.

இதேவேளை, மறைந்த தமிழக முதல்வரும், மக்கள் தலைவருமான எம். ஜி. இராமச்சந்திரனுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இருந்த உறவு பாசப்பிணைப்பு மிக்கது. எம். ஜி. இராமச்சந்திரன் புலிகளுக்கு வழங்கிய வெளிப்படையான ஆதரவு உலகமறிந்த விடயம். ஆனால், இன்று செல்வி ஜெயலலிதா மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்பது இவற்றிற்கு விரோதமானது. உண்மைக்குப் புறம்பானது.

ஆனால், தனது நடவடிக்கை பாரதூரமானதென்பதையும் இதுவே தமிழகத்தின் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் என்பதையும் செல்வி ஜெயலலிதா உணர்ந்திருக்கவில்லை. பஞ்சாப்பிலும் காஷ்மீரிலும் தீவிரவாதிகளை அடக்கி ஒடுக்குவதற்காக அமுல்படுத்தபபட்ட 'தடா' சட்டத்தை எதுவித தேவையும் அற்ற நிலையில் செல்வி ஜெயலலிதா தமிழகத்தில் அறிமுகப்படுத்தியுள்ளார். இது தற்பொழுது பலரின் கண்டனத்திற்கு உள்ளாகியுள்ளது.

மறைந்த இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி நாட்டில் 'எமெஜன்சியைப்' பிரகடனப்படுத்தியமையும் அதன் விளைவை 1977 தேர்தலில் சந்தித்தமையும், பஞ்சாப்பில் அகாலிதள ஆட்சியைக் கலைத்தமையும் அதன் விளைவைப்பின்னர் தீவிரவாதத்தின் வடிவில் இந்திராகாந்தி சந்தித்தமையும், இன்று இந்திய மத்திய அரசாங்கம் சந்தித்து வருவதையும் செல்வி ஜெயலலிதா புரிந்து கொள்ளுதல் நல்லது.

தற்பொழுது வளர்ந்து வரும் புலிகள் ஆதரவு சக்திகள் குறித்து அச்சம் கொண்டுள்ள செல்வி ஜெயலலிதா விடுதலைப் புலிகளைத் தமிழகத்தில் தடை செய்யுமாறு மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார். ஆனால் இது பிரச்சினையை மேலும் சிக்கலுக்குரியதாக்குமே ஒழிய தமிழ்நாட்டில் புலிகளுக்கு இருக்கும் ஆதரவை மட்டுப்படுத்துவதாகவோ அன்றி தடைப்படுத்துவதாகவோ அமையாது.

அத்தோடு தமிழகத்தில் தேசிய எழுச்சிக்கு வழி வகுக்கும் எனக்காரணம்கூறி விடுதலைப் புலிகளின் நடமாட்டத்திற்கு தடைவிதிப்பதினால் ஒருபோதும் தமிழக தேசிய எழுச்சியைக் கட்டுப்படுத்த முடியாது ஏனெனில் தமிழ்நாட்டில் தேசிய இனப் போராட்டம் வளர்ச்சியடைவது தனியாக தமிழ் நாட்டிற்கே உரிய ஓர் தனி அம்சமாக இருக்கப் போவதும் இல்லை. இந்தியாவில் அடக்கப்படும் இனங்களின் போராட்டத்தின் ஓர் அம்சமாகவுமேஇருக்கும் என்பதினாலாகும்.

# சந்திரிகாவைத் தடுக்க அனுரா குழுவினர் முயற்சி

(கொழும்பு)

திருமதி சந்திரிகா குமாரணதுங்கா பாதயாத்திரையில் கலந்து கொள்வதைத் தடுக்க அனுரா பண்டாரநாயக்கா ஆதரவாளர் முயற்சித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாளொன்றுக்குப் பதினைந்து மைல் நடப்பது சந்திரிகாவுக்கு சிரமமான காரியம் என்று அனுரா ஆதரவாளர்கள் தெரிவித்தார்களாம். அனுரா பண்டாரநாயக்காவினால் நாளொன்றுக்குப் பதினைந்து மைல் நடக்கமுடியுமானால், என்னால் முப்பது மைல் நடக்க முடியும் என்று சந்திரிகா பதிலளித்துத் தப்பித்துக் கொண்டார் என்று சொல்லப்படுகிறது.

மூத்த தலைவர்கள் அடையாளமாக சிறிது தூரம் பாதயாத்திரையில் கலநது கொள்வார்கள் என்று சுதந்திரக் கட்சிப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

தொ. கா. மாநாட்டில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

மிகவும் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் தொடர்ந்து பேசிய தொண்டமான் —

இந்தியத் தமிழ் சமூகத்திற்கெதிராக என்றுமே செயற்பட்டு வந்தவர்களே இச் சமூகத்தின் சமூக பொருளாதார நிலையைச் சீர்குலைக்க மிகத் தீவிரமாக செயற்பட்டு வருகின்றனர். தோட்டப்பகுதிகளில் பிறந்து வளர்ந்த இந்திய சமுதாயம் தேசிய நீரோட்டத்தில் கலந்துவிடாதவாறு சமய, இனவெறி சக்திகள் இந்திய விரோத சக்தியாக மீண்டும் உருவாகி

பதை பகிரங்கமாக ஆதரித்து நிற்பது இ. தொ. கா மட்டுமே. இதன்மூலமேவேலை வாய்ப்பு அதிகரிக்கப்பட்டு கொத்தடிமை நீங்கி புதிய சமூக அந்தஸ்தைப் பெறமுடியும்.

நாட்டின் இனப்பிரச்சினைகளுக்குப் பாராளுமன்றத் தெரிவுக்கமிட்டி மூலம் ஓர் இணக்கமான தீர்வு காண எடுக்கப்படும் முயற்சிகளை இ. தொ. காவரவேற்றது இதன் மூலம் ஒரு தீர்வொன்று காணப்படுமென நாம் திடமாக நம்புகிறோம்.

ஆரம்ப யோசனைகளாகவும் கலந்துரையாடல்களை ஆரம்பிப்பதற்காகவுமே நாம் இனப் பிரச்சினை தொடர்பான யோசனைகளை முன்வைத்தோம்.

ஆனால் நாட்டின்பிற்போக்குச்சக்திகள் இந்த யோசனைகளை இனவாத பிரசாரத்திற்காக முன்னெடுத்துச்செல்வதில் அக்கறை காட்டுகின்றன. இதன் மூலம் பிற்போக்குவாத சக்திகள் எமது சமூகத்தின் உரிமைகளை கட்டுப்படுத்துவதற்கு தம்மால் இயன்ற நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றன.

## துருக்கியில்மீண்டும் நிலநடுக்கம்

# 150 பேரைக் காணவில்லை, 1000 பேர் வீடிழந்தனர்

(இஸ்தான்புல்)

கிழக்கு துருக்கியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரண்டாவதுதடவையாக பெரும் நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது

கடந்த வாரத்தில் இடம் பெற்ற நிலநடுக்கத்தின் பின் ஏற்பட்ட இந்நில நடுக்கம் றிப்டர் அளவுகோலில் ஆறு புள்ளிகள் பதிவாகியது இந் நில நடுக்கத்தினால் உயிர்ச் சேதம் ஏற்பட்டதாகத் தெரியவரவில்லை. எனினும் நூற்றைம்பது பேர் வரையில் காணாமல் போயிருப்பதாகவும் ஆயிரக்கணக்கானோர்வீடுகளை இழந்துள்ளனர் எனவும் அறிவிக்கடபட்டுள்ளது.

# பிரபாகரன் குறித்து பேச்சு நடக்கிறதாம்

(டில்லி)

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் சம்மந்தப் பட்டதாய் இந்திய நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்படும் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனையும், திரு. பொட்டம்மானையும் சிறிலங்காவில் கைது செய்து இந்தியாவுக்கு கொண்டு வரும் வகையில் இந்தியா சிறிலங்கா அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது

இவ்வாறு இந்திய உள்துறை அமைச்சர் நேற்று முன்தினம் ராஜ்ய சபாவில் கூறினார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கை அரசு மெத்தனமாக நடத்துவதாக ஆளும் கட்சி மன்றம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அரசைக் குற்றம் சாட்டியதைத் தொடர்ந்து அமைச்சர் பதிலளித்துப் பேசினார்.

பிரபாகரனை முன்னர் கைது செய்ய அரசு முயற்சி எடுத்திருக்க வேண்டுமென ராஜ்ய சபா உறுப்பினர்கள் குற்றம் சாட்டினர்.

# இனப் பிரச்சினைகளை தேர்தலில் கிளறாதீர்

## லண்டனில் கோரிக்கை

இங்கிலாந்துப் பொதுத் தேர்தலில் இனப் பிரச்சினையை ஒரு முக்கிய பிரச்சினையாகக் கிளப்பி நாட்டில் நெருக்கடியை ஏற்படுத்தக் கூடாது என்று அரசியல்வாதிகளை லண்டனிலுள்ள ஓர் இயக்கம் கேட்டுக் கொண்டிருக்கிறது.

# ஐ. நா. வில் லிபியாவின் மீது அமெரிக்கா குற்றச்சாட்டு

(வாஷிங்டன்)

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களுக்கு இசைவாக லிபியா நடந்துகொள்ளவில்லையெனக் குற்றஞ்சாட்டும் தீர்மானம் ஒன்றை அமெரிக்கா வெள்ளியன்று ஐ. நா. பாதுகாப்புச் சபையில் முன்மொழியவுள்ளது.

1989-ம் ஆண்டில் பான் எம் விமானக் குண்டுவெடிப்பில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் இரு லிபியர்கள் விடயத்தில் லிபியா ஒத்துழைக்கவில்லை எனறே அமெரிக்கா குற்றஞ்சாட்டி வருகின்றது.

ஐ நா. பாதுகாப்புச் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்படுமாயின் மற்ற நாடுகள் லிபியாவுடனான விமானத் தொடர்புகளை துண்டிக்கவும், இராஜதந்திரிகள் அலுவலகங்களை மூடி வைக்கவும் வழியேற்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளைதென்கொரியா லிபியாவில் கடமைபாற்றும் தனது ஐயாயிரம் ஊழியர்களை திருப்பியழைக்க முடிவு செய்திருப்பதாக அறிவித்துள்ளது.

# 1991 இல் 17 நாடுகளில் 66பத்திரிகையாளர்கொலை

(லண்டன்)

கடந்த ஆண்டில் 17 நாடுகளில் 66 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஒரு வருடத்தில் இவ்வளவு தொகையினர் கொல்லப்பட்டது இதுவே முதற்தடவையாகும். பத்திரிகையாளருக்கு ஆபத்தான ஆண்டாக 1991 கொள்ளப்படுகிறது இந்த 66 பேரில் காணாமற்போன ஐவரும் அடங்குவர்.

பத்திரிகையாளருக்கு மிக ஆபத்தான நாடு யூகோஸ்லாவிய நாடாகும், இங்கு 19 பத்திரிகையாளர்கள்கொல்லப்பட்டதுடன் இருவரைக் காணவில்லை. முன்னாள் சோவியத் குடியரசான அசர்பைசானில் மூவரும் லட்வியாவில் இருவரும் ரஷ்யாவில் ஒருவரும் கொல்லப்பட்டனர்.

1991 இல் கொலம்பியாவில் பத்துப் பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டனர். இதைத் தவிர உலகில் 96 பிரசுர நிலையங்கள் சுவீகரிக்கப்பட்டுள்ளன. 66 தடை செய்யப்பட்டன. 27 செய்தி நிறுவனங்கள் முற்றுகையிடப்பட்டன.

வளைகுடா யுத்தத்தின் போது அமெரிக்காவும் அதன் கூட்டு நாடுகளும் பத்திரிகையாளர் மீது கடும் கட்டுப்பாட்டை விதித்துள்ளனர். எல்சல்வடோர் சண்டையிலும் பத்திரிகையாளர் கட்டுப்பாட்டுக்குள்ளாகியுள்ளனர்.

பத்திரிகையாளர் பாதுகாப்புக்கான குழு மேற்படி விபரங்களை வெளியிட்டுள்ளது.

ஈழநாதம்

# இந்தியக் கொள்கையில் மாற்றம் எதுவுமில்லை

(டில்லி)

அணு ஆயுத பரவல் தடுப்பு உடன்படிக்கையில் கையெழுத்திடுவதில்லை என்ற இந்தியாவின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை என்று நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் வெளியுறவுத்துறை இணை அமைச்சர் எட்வார்டோ பெலாஸ்ரோ கூறினார்.

அணுஆயுதபரவல் தடுப்பு ஒப்பந்தம் பாரபட்சமானது என்று வர்ணித்த அவர் மேலும் கூறுகையில், இந்தியாவின் நிலைப்பாடு வாஷிங்டனில் அமெரிக்க அதிகாரிகளுக்கு வெளியுறவுச் செயலாளர் ஜே. என். டிக்ஷித் மூலம் தெரியப்படுத்தப்பட்டதாகவும் குறிப்பிட்டார். அத்துடன் அமெரிக்க-இந்தியக் கடற்படைகளின் கூட்டு ஒத்திகையானது இந்தியக் கரையோரத்தில் இடம்பெறாது எனவும் தெரிவித்தார்.

மேலும் அணுஆயுதப் பரிகரணம் என்பது உலகளாவிய விவகாரம் என்றும், அதைப் பிராந்திய மட்டத்தில் அணுகித் தீர்க்க முடியாது என்றும் அவர் தமதுரையில் குறிப்பிட்டார்.

## யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு உதைபந்தாட்டப் போட்டி

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் 11பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் வலி - கிழக்கு பிரிவுக்கான இன்றைய போட்டியில் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து யாழ்ப்பாணம் யோன் கெனடி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. இப்போட்டி யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் பி. ப. 3. 00 மணிக்கு ஆரம்பமாகும்.

## தென்ஆற்காடு குள்ளன்காவடி

# காவல்நிலையம் மீது மக்கள் தாக்கு; பொலிஸ் துப்பாக்கிச் சூடு; ஒருவர் பலி

(சென்னை)

தென்ஆற்காடு மாவட்டத்திலுள்ள கடலுக்கு அருகேயிருக்கும் குள்ளன்காவடி என்னும் கிராமத்தின் காவல் நிலையத்தை தாக்க முற்பட்டதாகக் கூறப்படும் மக்கள் கூட்டத்தை கலைக்க பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர், இதில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மற்றும்பலர் காயமடைந்ததாகவும் தெரிய வருகின்றது.

நேற்றுமுன்தினம் காலையில் இடம்பெற்ற கள்ளச் சாராயம் தொடர்பான பிரச்சினையில் கைது செய்யப்பட்ட சிலரை விடுவிக்ககோரி சம்மட்டிக் குப்பம் பகுதியை சேர்ந்தோர் பெரும் கும்பலாக ஆயுதங்களுடன் திரண்டுதாக்கியதாகவும், இதனால் ஒரு சப் இன்ஸ்பெக்டர் காயமடைந்ததாகவும். நிலைமையை சமாளிக்க பொலிசார் தடியடிப்பிரயோகம் செய்தபோதும் நிலைமை கட்டுக்கடங்காமல்போனதால் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேரிட்டதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் கூறியுள்ளன. தொடர்ந்தும் இப்பகுதியில் சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதற்காக,மேலதிகப் பொலிசார் நிறுத்தப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

## வணிகஜோதி வெளியீட்டு விழா

(அரியாலை)

யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் 'வணிக ஜோதி' 14 வது மலர் வெளியீட்டு விழா வரும் வெள்ளிக்கிழமை மு. ப. 11 மணிக்குக் கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வெளியீட்டு விழா செல்வன் பா.வாசன் தலைமையில் நடைபெறும்.

பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி. வேலாயுதம் பிரதம அதிதியாகவும், நல்லூர் உ. அரச அதிபர் ஆ. மகாலிங்கமும், உதவிக் கல்விப் பணிப்பாளர் (வர்த்தகம்) சி. சிவராசாவும் விசேட அதிதியாகக்கலந்து கொள்வார்கள்.

# தீவிரவாதிகளை அடக்க காவல்துறை வலுபடுத்தப்படும்

-ஜெயலலிதா

(சென்னை)

தமிழ்நாட்டில் புலிகளை அடக்கும் பணியில் தமிழக காவல் துறை பலப்படுத்தப்படும் என்று சட்டப்பேரவையில் முதல்வர் ஜெயலலிதா தெரிவித்தார். இதற்காக நான்கு கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் நூற்றி இருபத்துமூன்று டெம்போ வாகனங்களும், அதிசக்தி வாய்ந்த தொலைத்தொடர்பு சாதனங்களும் கொள்வனவு செய்யப்படும் என்றும் அவர் மேலும் கூறியிருக்கிறார்.

அத்துடன் தமிழகத்தில் இதுவரை நூற்றிஇருபத்தெட்டுப் பேர் தடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர் என்றும், ஆறுபேர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டனரெனவும் கூறியதுடன் தடா சட்டத்தின் விதிமுறைகளை மிக எச்சரிக்கையோடும், நிதானத்தோடும் பயன்படுத்தப்படுவதாகவும் தெரிவித்தார்.

## நிவாரண மோசடியில் கிராமசேவையாளர்

[யாழ்ப்பாணம்]

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியான சேவை வழங்கும் பொறுப்பைக் கொண்ட கிராமத்தின் சேவையாளர் ஒருவரும், எமது அமைப்பின் நம்பிக்கைக்குரியவராக இருந்து அரச துறையினர் நேர்மையான முறையில் செயற்படுவதை உறுதி செய்ய வேண்டிய கட்டுப்பாட்டுடைய சிற்றூரவைத் தலைவர் ஒருவரும் சேர்ந்து நீண்ட காலமாக மேற்கொண்டு வந்த நிவாரண மோசடி மக்களின் இரகசிய தகவல்களின் விளைவாக அம்பலத்துக்கு வந்துள்ளது.

வட்டைப்புலம் இளவாலையைச் சேர்ந்த சிற்றூரவைத் தலைவரான சுவாமிப்பிள்ளை வில்லியம், கல்லூரிவீதி வடலியடைப்பைச் சேர்ந்த (ஜே/153 ஆம் இலக்கக் கிராம சேவையாளர் பிரிவு) கிராம சேவையாளரான சபாபதி நாராயணன் ஆகிய இருவருமே மேற்படி கூட்டு மோசடியை செய்தவர்களாவார்கள்.

## இந்திய கடற்படையில் உள்நாட்டுஏவுகணைக்கப்பல்

உள் நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஐ.எம்.எஸ். வித்துல் என்ற இரண்டாவது ஏவுகணைக் கப்பலை பாதுகாப்பு இணை அமைச்சர் கிருஷ்ணகுமார் நேற்று முன்தினம் பம்பாயில் வைபவ ரீதியாக கடற்படையுடன் இணைத்தார்.

இவ் வைபவத்தில் பேசிய அமைச்சர் கூறுகையி இக்கப்பல் இயக்கி வைக்கப்படுவது நாட்டின் முன்னேற்றத்தை எடுத்துக் காட்டுவதாக இருப்பதாகவும், நாட்டின் பாதுகாப்பு துறையில் தன்னிறைவை அடைய கடற்படை எடுக்கும் முயற்சியில் ஒரு திருப்பு முனை என்றும் குறிப்பிட்டார்.

## முதலுதவி பயிற்சி

தீவக ஆசிரியர்களுக்கான முதலுதவிப்பயிற்சி இம்மாதம் 21 ஆம், 22 ஆம் திகதிகளில் திருக்குடும்பக் கன்னியர் மடம் (தமிழ்) பாடசாலையில் நடைபெறவுள்ளது. [88]

## கட்டுப்பாட்டு விலையில் வெள்ளைத் துணிகள்

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளை அதன் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் மூலம் வெள்ளைத் துணிகளை கட்டுப்பாட்டு விலைக்கு விற்று வருகின்றது எனத் தெரியவருகின்றது. (75)

## யோசனையை ஏற்குமாறு தொண்டா கூறவில்லை

- தர்மதேவா

(கொழும்பு)

யோசனையை ஏற்குமாறு தொண்டமான் வலியுறுத்தவில்லையென பாராளுமன்ற தெரிவுக்குழுவின் உறுப்பினரான தர்மதேவா கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் கோாலை தேவல்தெனிய என்னுமிடத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய அவர் மேலும் கூறுகையில், தமிழ் மக்களின் சார்பாக இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஒரு யோசனையை அமைச்சர் தொண்டமான் முன்வைத்துள்ளாரே தவிர அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென அவர் வலியுறுத்தவில்லை. அதை அரசாங்கம் ஏற்றுக் கொண்டதாகவும் யாரும் கருதக்கூடாது எனவும் குறிப்பிட்டார் அத்துடன் இனப் பிரச்சினைத்தீர்வுக்காக யாரும் யோசனைகளை முன்வைக்கலாம் எனவும் தெரிவித்தார்

## உண்ணா விரதம்

நல்லூர் வட்டவைப் பிரதேசத்தில் இவ் உண்ணாவிரத நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இதனைத் தொடர்ந்து மாலை ஏழுமணிக்கு அரியாலை சனசமூக நிலையத்தில் நினைவஞ்சலிக்கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

## ஆசிரியர் வதிவிடபிரச்சினை; தீர்க்குமாறு கோரிக்கை

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் ஆசிரியர்களுக்கு வதிவிடமில்லாத பிரச்சினையைத் தீர்க்குமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கவவுனியாமாவட்டப் பிரதிநிதிகள் கல்விச்சேவைகள் அமைச்சர் சுனேத்திரா ரணசிங்காவைக் கோரியுள்ளனர்.

ஆசிரியர் குடும்பங்கள் தங்குமிடவசதியில்லாமல்சிறிய வீடுகள் அல்லது அறைகளில் வாடகைக் குடியிருப்பாளர்களாக இருக்கிறார்கள் என்றும், அவர்களிடமிருந்து அதிக வாடகை வசூலிக்கப்படுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இ த ஆ. சங்க மாவட்டப் பிரதிநிதிகளான கே. சிவஞான…

…பேருக்கும், இரண்டாம் தர அதிபர்கள் பதினான்கு பேருக்கும், மூன்றாம் தர அதிபர்கள் 117 பேருக்கும் வெற்றிடங்கள் இருப்பதாகவும். அவற்றை உடனடியாக நிரப்பும்படியும் கேட்கப்பட்டுள்ளது.

கல்வியியல் டிப்புளோமா பட்டப்பின்படிப்பை வவுனியாவிலும் நடத்தும்படி சங்கப் பிரதிநிதிகள் கல்வி, உயர் கல்வி அமைச்சு அதிகாரிகளைக் கோரியுள்ளனர்.

## குடாக்கடற் பிரதேசத்தில் கடற்படை தீவிர ரோந்து

குடாக்கடல் பிரதேசத்தில்…

…ரால் கைது செய்யப்பட்டு பின்…

## உயர்தர பரீட்சை திகதியை உடன் அறிவிக்க கோரிக்கை

கல்விப்பொதுத்தராதர உயர்தரத்திற்கான விசேட பரீட்சையை நடாத்துவதற்கான திகதியை அறிவிக்கும்படி கோரும் அவசர செய்தி ஒன்றை யாழ். கல்விப்பணிப்பாளர் பரீட்சைத்திணைக்களத்திற்கு அனுப்பிவைத்திருக்கிறார். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக நேற்று இச்செய்தி அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது.

அடுத்த மாதம் முதல் வாரத்தில் மேற்படி பரீட்சை நடாத்தப்பட இருக்கிறது என்று முன்னர் அறிவிக்கப்பட்டதுடன் பரீட்சை அனுமதி அட்டைகளும் விநியோகிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. ஆனால் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை வழங்க வேண்டாம் என்றும் பரீட்சை தொடர்பான வேலைகளை இடை…

## தியாகி

…கப் பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் முழு விபரமும் வருமாறு:

## அன்னை பூபதி

உலகை ஒருகணம் உலுப்பிய…

…மொத்தமான குரலாக பாரத அரசுக்கு பாடமொன்றைச் சொல்லிவிட்டுத் தன் மூச்சை நிறுத்திக் கொண்டார். அந்நியர்கள் இந்த மண்ணை ஆக்கிரமிக்க வந்தால் இந்த மண் அடங்கிப் போகாது; பணிந்து போய்ப் பார்த்துக் கொண்டி…

## வடக்குப்

…வம் குண்டு வீசக்கூடும் என்ற அச்சநிலை இப்போது இந்த ஊரடங்கு மூலம் உலகத்துக்குத் தெரிய வந்திருக்கிறது. வடமராட்சி வட்டாரத்தில் இந்தத் தாக்குதல் நடக்கும் என்று பரவலாக அஞ்சப்படுகிறது.

## யாழ்

…செல்வோம் எனவும் தெரிவித்தார்.

மேலும் நாம் தமிழ் மக்களுக்கு விரோதமானவர்கள் அல்ல அமைதியையே நாம்விரும்புகிறோம் எனவே இதுதொட…

கைக் குடியிருட்பாளர்களாக இருக்கிறார்கள் என்றும், அவர்களிடமிருந்து அதிக வாடகை வசூலிக்கப்படுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இ. த ஆ. சங்க மாவட்டப் பிரதிநிதிகளான கே. சிவஞானமும், என். சந்திரசேகரம் பிள்ளையும் கூட்டாகக் கையெழுத்திட்ட இந்த மகஜரில், வவுனியா மாவட்டத்தில் முதலாம் தர அதிபர்கள் மூன்று

கோரியுள்ளனர்.

# குடாக்கடற் பிரதேசத்தில் கடற்படை தீவிர ரோந்து

குடாக்கடல் பிரதேசத்தில் சிறிலங்கா கடற்படையினரின் பீரங்கிப் படகுகள் சிறிய, பாரிய கப்பல்கள் என்பன இடைவிடாது ரோந்து புரிந்து வருகின்றன. இந்தத் தகவலை சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்ட குருநகரைச் சேர்ந்தவரான அ. இராசக்கோன் தெரிவித்தார்.

இவரும் இவரது பதினைந்து வயது மகனும் வேறொரு கடற்தொழிலாளியும் கடந்த வெள்ளியன்றுசிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். இவர்கள் கடற்படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டதுடன் ஐம்பதிற்கு மேற்பட்ட வலைகளையும் கடலில் வீசிவிடுமாறு வற்புறுத்தப்பட்டனர். இவர்களின் வலைகள் வெட்டப்பட்டு கடலில் வீசப்பட்டன. நான்கு தினங்கள் பாலைதீவு கடற்கரையில் இருந்த பின்னர் சொந்த இடத்திற்கு நேற்று வந்து சேர்ந்தனர். கடற்படையினருடன் தமிழ்மொழி சரளமாகப் பேசும் ஒருசிலர் இருந்ததாகவும் அவர் மேலும் கூறினார். (21

தெரியவருகின்றது. (75)


## அறிவித்தல்

அருள்மிகு இரணைமடு ஸ்ரீ கனகாம்பிகை
அம்பாள் ஆலயம் - கிளிநொச்சி
வருடாந்த பொதுக்கூட்டம்

இடம்: ஆலய மண்டபம்
காலம்: 22-03-1992 ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00 மணி

தலைவர்: திரு. வே. இராசேந்திரம் அவர்கள்
அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகம் தரும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
மு. இராமச்சந்திரன்
கௌரவ செயலாளர்

(2299)



உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான பிரசோற்பத்தி ஆண்டு பங்குனித் திங்கள் 5ஆம் நாள் (18 - 03 - 1992) இன்று முற்பகல் 10-45 மணி முதல் 11-35 மணி வரையுள்ள இடப லக்கின சுப முகூர்த்த வேளையில்,

| | |
|---|---|
| எமது புத்திரன் திருவளர் செல்வன்<br>**யோகேஸ்வரன்**<br>[உரிமை: நியூ லலிதா ஜுவல்லர்ஸ் யாழ்ப்பாணம்)<br>அவர்களுக்கும் | எமது புத்திரி திருவளர் செல்வி<br>**சுபாஜினி**<br>அவர்களுக்கும் |

திருவருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில் நடைபெறவிருக்கும் திருமாங்கல்ய தாரண வைபவத்தில் தாங்கள் தங்கள் சுற்றஞ் சூழ வருகை தந்து மணமக்களை வாழ்த்தியருளும் வண்ணம் அன்புடன் அழைககின்றோம்.

வரவேற்புபசாரம்: இன்றுமாலை 4-00 மணியளவில் மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

இங்ஙனம், தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி செ. பேரம்பலம்
52/2, வைமன் றோட்,
நல்லூர்.
யாழ்ப்பாணம்.

திரு. திருமதி செ. சிவபாதலிங்கம்
(செல்லையா சிவபாதலிங்கம் ஜுவல்லர்ஸ்)
218H, 191H, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(இருவீட்டார் அழைப்பு)

சி/4062


தியாக கப் பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் முழு விபரமும் வருமாறு:

## அன்னை பூபதி

உலகை ஒருகணம் உலுப்பிய புயலின் பெயர் இது எம்மை ஆக்கிரமித்த அந்நியர்களையே அதிர வைத்த பூகம்பத்தின் பெயரிது. தமிழீழ மக்களின் விடுதலை உணர்வின் தாரக மந்திரம் இது.
நேற்றாகி, இன்றாகி, நாளையாகும் காலச்சூழலில்இவளின் காலடிச் சுவடுகள் (மறைந்து விடாது) நிலைத்து நிற்கும்.

'இந்திய ஆக்கிரமிப்பாளர்கள்' எம் அன்னை பூமியை அள்ளி விழுங்கிட நின்ற அந்த நாட்களை எண்ணிப்பாருங்கள். எங்கள்தாய்மண், மேலாதிக்கவாதிகளின் கொடூர நெருப்பில்கொதித்துக்கொண்டிருந்த காலத்தை நினைத்துப் பாருங்கள். அந்த நினைவுகள் இன்றும் கூட உங்கள் நெஞ்சுகளில் நெருப்புமூட்டும். இந்த நேரத்தில் தான் பூபதி அம்மா போராடினார். 15 03. 1988 அன்று மட்டு நகரில், மாமாங்க வீதியில், குருந்த மர நிழலில் மேடையிட்டு உண்ணா நோன்பேற்றார்.

சண்டையை நிறுத்து! புலிகளோடு பேசு! ஏற்கக் கூடிய நிபந்தனைகளைத்தான் அம்மா இந்திய அரசுக்குப் போட்டார். ஆதிக்கவாதிகள் அம்மாவின் நிபந்தனைகளை அலட்சியம் செய்தனர்; பயமுறுத்திப் பணியவைக்கப் பார்த்தனர்.

நெருக்கு வாரங்களைக் கொடுத்துப் போராட்டத்தை நிறுத்தி விட முயன்றனர். புயலுக்கு திரை போட்டுப் பார்த்தார்கள் காட்டுத்தீயைக் கைகளால் மூடப் பார்த்தார்கள். தோற்றுப் போனது இந்திய அரசு. முப்பது நாட்கள் இந்த மண்ணுக்காகவும், மக்களுக்காகவும் அந்த மெழுகுவர்த்தி உருகியது.

19-04-1988 அன்று அன்னை பூபதி தமிழீழத்தின் ஒட்டு அரசுக்கு பாடமொன்றைச் சொல்லிவிட்டுத் தன் மூச்சை நிறுத்திக் கொண்டார். அந்நியர்கள் இந்த மண்ணை ஆக்கிரமிக்க வந்தால் இந்த மண் அடங்கிப் போகாது; பணிந்து போய்ப் பார்த்துக் கொண்டிருக்காது.

இந்த மண் போராடும், என்ற பாடத்தைப் புகட்டி விட்டு அந்தப் புகழுடம்பு பேச்சிழந்து போனது. அன்னை பூபதி தியாகத்தின் தோற்றப் பாடானாள்.

## அன்பார்ந்த தமிழீழ மக்களே!

அன்னை பூபதியின் நாலாம் ஆண்டு நினைவு நாட்களை எதிர்வரும் 19 - 03 - 1992 தொடக்கம் 19 - 04 - 1992 வரை தமிழீழமெங்கும் கொண்டாடுவோம். உலகமெங்கும் இந்த நாட்களைப் பேசவைப்போம்.

அன்னை பூபதி ஒரு தனி மனித படிவமல்ல; எங்கள் எல்லோரினதும் ஒட்டுமொத்தமான கருத்து வடிவம். விஸ்தரிப்புவாத மையிருட்டு எம் தாயகத்தின்மீது குவிந்திருந்த போது அதைக் கலைக்க வென்று எழுந்த கதிரவன் அவருக்கு நாங்கள் என்ன கைமாறு செய்வோம்? நன்றியை எதிர் பாராத அந்த நாயகியை நினைவு கொள்ளுவோம். இந்த மண்ணிற்காகத் தன்னை இழந்த அந்தத்தாயை மதித் கொள்ளுவோம்.

புதிது புதிதாகப் பிறந்து வரும் எங்கள் புதிய தலைமுறைக்குள் பூபதி அம்மாவின் தனக்கென வாழாத தியாகத்தைச் சொல்லி வைப்போம். அந்நிய சக்திகள் எங்கள் மண்ணுக்குள் புகுந்தால் என்னவாகும் என்பதை மீண்டும் மீண்டும் இரைமீட்டிப்பார்ப்போம். பூபதி அம்மாவின் நினைவு நாட்களைக் கொண்டாடுவது நன்றிக்கடனுக்காக அல்ல. அந்த நாடகளை நினைவு கூர்ந்து அடுத்த நாட்களை சமூகப் பணிக்கான போராட்டத்தை முன்னெடுப்பதற்காகவே.

மட்டு நகரினில் மாமாங்க வீதியில்
மாதரசி கிடந்தாள்—ஒரு
மாதம் கிடந்த பின் மக்களுக்காகவே
மண்ணை அவள் துறந்தாள்.

யாழ் செல்வோம் எனவும் தெரிவித்தார்.

மேலும் நாம் தமிழ் மக்களுக்கு விரோதமானவர்கள்அல்ல அமைதியையே நாம்விரும்புகிறோம் எனவே இது தொடர்பாக தென் மாகாணத்தில் பல கூட்டங்களை நடத்தவுள்ளோம் இதன் முதற் கட்டமாக எதிர்வரும் 24ஆம் திகதி களுத்துறையில் நடைபெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கப்பட்டிருந்தது. ஆனால் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை வழங்க வேண்டாம் என்றும் பரீட்சை தொடர்பான வேலைகளை இடைநிறுத்தி வைக்கும்படியும் பரீட்சை த்திணைக்களத்திலிருந்து வந்த அறிவிப்பைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது


## வெளிவந்துவிட்டது

ஈழநாதம் வெளியீடான

# காலமும் கோலமும்

ஓவியர் தயாவின் கருத்தோவியங்கள்

கிடைக்குமிடம் :-

நாயகபாலன் ஸ்ரோஸ்
மானிப்பாய்



## முக்கிய அறிவித்தல்

வடபகுதிக்கு வெளியே புகையிலை
கொண்டுசெல்லும் வாகன
உரிமையாளர்களின் கவனத்திற்கு

வடபகுதியிலிருந்து வெளிமாவட்டங்களுக்கு புகையிலை ஏற்றிச்செல்லும் சகல வாகன உரிமையாளர்கள் அனைவரும் அதுபற்றிய மேலதிக விபரங்களை அறிவதற்கு உடனடியாக வடபகுதி பொதிசுமக்கும் வாகன சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

ஸ்ரான்லி வீதி,
(மஸ்தன்லிமிட்டெட்டிற்கு அருகாமையில்)
யாழ்ப்பாணம்

வடபகுதி பொதிசுமக்கும்
வாகன சங்கம்

[2308]



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 - ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.